[திரு. துரைமுருகன்] [2023 ஏப்ரல் 10

"தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 227-ன்கீழ், 2023-2024 ஆம் நிதியாண்டிற்குரிய அவை உரிமைக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி, பதினான்கு உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் குறிப்பிடும் நாளன்று இப்பேரவை தேர்ந்தெடுக்கும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

4. அறிவிப்புகள்

(அ) பேரவைக் குழுக்களுக்கு உறுப்பினர்கள் தேர்தல்-கால அட்டவணை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. பேரவைக் குழுக்களுக்கான தேர்தல். ஒற்றை வாக்கு முறைப்படி தேர்தல் நடத்துவதற்கு வகுக்கப்பட்டுள்ள விதிமுறைகளின்கீழ், மதிப்பீட்டுக் குழு (Committee on Estimates), பொதுக் கணக்குக் குழு (Committee on Public Accounts), பொது நிறுவனங்கள் குழு (Committee on Public Undertakings), அவை உரிமைக் குழு (Committee of Privileges) ஆகியவற்றுக்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க வேட்பாளர்கள், வேட்புத் தாள்களை 17-4-2023, திங்கட்கிழமை பிற்பகல் 3-00 மணிக்குள் சட்டமன்றப் பேரவைச் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். வேட்புத் தாள்களை சட்டமன்றப் பேரவைச் செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

வேட்புத் தாள்கள், 18-4-2023, செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும். விலகிக்கொள்ள விரும்பும் வேட்பாளர்கள், 19-4-2023 புதன்கிழமை பிற்பகல் 3-00 மணிக்குள் விலகிக்கொள்ளலாம்.

வேட்பாளர்களின் எண்ணிக்கை, நிரப்பப்பட வேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு மேற்படுமாயின், குழுக்களுக்கான உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க தேர்தல் நடைபெறும் நாள் பின்னர் அறிவிக்கப்படும்.

3. அரசினர் தீர்மானங்கள்—*தொடர்ச்சி*

(உ) சட்டமன்றப் பேரவை விதி 92 (vii) மற்றும் விதி 287 ஆகியவற்றில் காணப்படும் சில பதங்களின் பயன்பாடுகளை நிறுத்தி வைத்து நிகழ்ச்சி நிரலில் இனம் 4–ல் உள்ள அரசினர் தனித் தீர்மானத்தை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “சட்டமன்றப் பேரவை விதி 92 (*vii*)–ல் அடங்கியுள்ள* ‘...conduct of any Governor...’ *என்னும் பதம் மற்றும்* ‘...use the Governor's name for the purpose of influencing a debate;’ *என்னும் பதம் மற்றும் விதி 287–ல் அடங்கியுள்ள* ‘Provided, however, that the above provision shall not be invoked to suspend rule *92(*vii*)*’ *என்னும் பதம் ஆகியவற்றின் பயன்பாடுகளை நிறுத்தி வைத்து இன்றைய நிகழ்ச்சி நிரலில் இனம்–4–ல் குறிப்பிடப்பட்டுள்ள அரசினர் தனித் தீர்மானம் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்”*

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)